சிங்கப்பூரில் 7வது உலக சுகாதார மாநாடு

‘‘கொரோனா போன்ற தொற்று நோயை கண்காணிக்க சர்வதேச ஒத்துழைப்புடன் புதிய வழிமுறை அவசியம்’’: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வலியுறுத்தல்

சென்னை, நவ.8–

உலகம் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒட்டு மொத்த மனிதகுலமும் கோவிட் 19 (கொரோனா) பெருந்தொற்று பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. தற்போதுள்ள போக்குவரத்து மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோய்கள் மீண்டும் மீண்டும் ஏற்படுவதை தவிர்க்க இயலாத நிலை உள்ளது. இதுபோன்ற தொற்றுநோயை கண்காணிக்க, எச்சரிக்கை மற்றும் நிர்வகிப்பதற்கு, பிராந்திய தேசிய மற்றும் சர்வதேச அளவிலான ஒத்துழைப்புடன் கூடிய ஒரு வழிமுறையை நாம் உருவாக்க வேண்டுமென்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தினார்.

முதலமைச்சர் உத்தரவின்படி, 7–வது உலக சுகாதார மாநாடு 2022 எனும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அரசு முறை பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று (8–ந் தேதி) மாநாட்டில் “சுகாதாரத்திற்கான உலகளாவிய நிதியுதவி” எனும் தலைப்பில் உரையாற்றினார்.

ஜூனோசிஸ் என்பது மனிதரல்லாத விலங்கிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் தொற்று நோயாகும். ஜூனோடிக் நோய் கிருமிகள் பாக்டீரியா, வைரஸ் அல்லது ஒட்டுண்ணியாக இருக்கலாம் அல்லது வழக்கத்திற்கு மாறான காரணிகளை உள்ளடக்கியிருக்கலாம் என்றும், நேரடி தொடர்பு அல்லது உணவு, நீர் அல்லது சுற்றுச்சூழலின் மூலம் மனிதர்களுக்கு பரவலாம் என்றும்,

ஜூனோஸிஸ் புதிதாக அடையாளம் காணப்பட்ட அனைத்து தொற்று நோய்களிலும், ஏற்கனவே உள்ள பல நோய்களிலும் பெரும் சதவீதத்தை உள்ளடக்கியுள்ளதாகவும், சமீபத்திய ஆண்டுகளில், மனிதர்கள் மற்றும் கால்நடைகள் ஆகிய இரண்டின் மீதான நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து வகை பயன்பாடு, மற்றும் தவறாகப் பயன்படுத்துதல், ஆகியவை நோய்க்கிருமிகளிடையே பெரிய அளவிலான ஆண்டிபயாடிக் மருந்து எதிர்ப்பை ஏற்படுத்துகிறதாகவும், ஆண்டிபயாடிக் மருந்து எதிர்ப்பு என்பது பொதுவாக பரிணாம வளர்ச்சியின் ஒரு பகுதியாக காலப்போக்கில் நடக்கும் மரபணு மாற்றங்கள் ஆகும் என்றும் தெரிவித்தார்.

பாக்டீரியா எதிர்ப்பு

அவர் மேலும் பேசியதாவது:

ஆண்டிபயாடிக் மருந்து எதிர்ப்பு, குறிப்பாக பாக்டீரியா எதிர்ப்பு என்பது சுகாதார நடைமுறைகள், தொழில், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு முறைகளின் மூலம் நடைபெறுகின்றது. ஆண்டிபயாடிக் மருந்துகளின் நுகர்வு அதிகரித்து வருவது ஆண்டிபயாடிக் மருந்து எதிர்ப்பின் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். ஆண்டிபயாடிக் மருந்துகளின் பகுத்தறிவற்ற பயன்பாடு, விற்பனை தொடர்பான மோசமான விதிமுறைகள், சுய மருந்து மற்றும் கல்வியின்மை பற்றிய விழிப்புணர்வு ஆகியவை உலகம் முழுவதும் நுண்ணுயிர் எதிர்ப்பு காரனமாக உள்ளது.

அதிகப்படியான ஆண்டிபயாடிக் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல், கால்நடைகளின் வளர்ச்சி ஊக்கிகளாக ஆண்டிபயாடிக் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல், மருத்துவமனை மற்றும் சமூகத்தில் ஆண்டிபயாடிக் பயன்பாடு உள்ளிட்ட மருந்து தணிக்கை, மருந்துவிழிப்புணர்வு தொடர்பான வழிகாட்டுதல்கள் ஆகியவையே இன்றைய காலத்தின் தேவையாகும்.

ஆண்டிபயாடிக் மருந்து எதிர்ப்பு என்பது உலகம் முழுவதும் பெரும் பொது சுகாதார அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. பல மருந்து எதிர்ப்பு பாக்டீரியா மற்றும் பான் மருந்து எதிர்ப்பு பாக்டீரியா ஆகியவை இதன் மூலமாக மருந்தை எதிர்க்கும் நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோய்த் தொற்றுகளால் உருவாகின்றன. மருந்துகளை எதிர்க்கும் புதிய நுண்ணுயிரிகளுக்கு எதிராக செயல்படும் ஆண்டிபயாடிக் மருந்துகளின் விலை அதிகமாகவும், பெரும்பாலான மக்களால் வாங்க முடியாதவையாக உள்ளதாகவும், இதுதவிர, முறையற்ற ஆண்டிமைக்ரோபியல் பயன்பாடும் சிக்கலை ஏற்படுத்துகிறது.

எனவே மருத்துவ நிறுவனங்கள், மருத்துவர்கள், நோயாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு முறையான மருந்து தேர்வு, முறையான பரிசோதனை, சிகிச்சையின் காலம், தடுப்பூசிகள் மற்றும் விரிவான தொற்றுக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை கற்பிக்க வேண்டும். உலகெங்கிலும் உள்ள பொது சுகாதார நிறுவனங்களில் மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தும் பல மருந்து எதிர்ப்பு உருமாற்ற நுண்ணுயிரிகள் வெளிப்படுவதை தடுக்கப்பட வேண்டும்.

இதற்கு சிறந்த புரிதல், கூடுதல் ஆராய்ச்சி மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு கண்காணிப்பு ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைக்கான பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் நிதியுதவி ஆகியவற்றில் உலகளாவிய ஒத்துழைப்பு ஆகியவை தேவைப்படுகிறது. ஆண்டிபயாடிக் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட திட்டங்கள், பொதுவாக “ஆன்டிமைக்ரோபியல் ஸ்டீவர்ட்ஷிப் திட்டம்” என குறிப்பிடப்படுகிறது.

இத்திட்டம் இந்தியாவில் நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பின் தரத்தை மேம்படுத்துவதில் உதவிகரமாக இருப்பதுடன், எங்கள் மருத்துவமனைகளில், மருத்துவமனை தொற்று கட்டுப்பாட்டு குழுவால் செயல்படுத்தப்படுகிறது.

எனவே, நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை பொறுப்புடன் பயன்படுத்துவது மட்டுமே எதிர்கால சந்ததியினர் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் பலனை அனுபவிக்க உதவுகிறது. இந்த மாநாடு முக்கியமான உலகளாவிய பிரச்சனை குறித்த விழிப்புணர்வை மேலும் அதிகரிக்கவும், ஆண்டிபயாடிக் எதிர்ப்பு நுண்ணுயிரிகளின் வெளிப்பாட்டைக் குறைக்கவும் உதவும் என்று நம்புகிறேன்.’’

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த மாநாட்டில் அரசு முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், நோய்த் தடுப்பு மருந்து துறை இயக்குநர் செல்வவிநாயகம், சிங் ஹெல்த், சர்வதேச ஒத்துழைப்பு அலுவலக இயக்குநர் விஜயராவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட

நீர்நிலைகளுக்கு அருகில் வசிக்கும் பொதுமக்களுக்கு இலவச கொசு வலை: அமைச்சர்கள் நேரு, சேகர்பாபு வழங்கினார்கள்

சென்னை, நவ.8–

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்நிலைகளின் அருகாமையில் வசிக்கும் பொதுமக்களுக்கு கொசுக்களினால் ஏற்படும் வியாதிகளைத் தடுக்கும் விதமாக விலையில்லா கொசு வலைகளை அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு இன்று (8–ந் தேதி) ராயபுரம் மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

சென்னை மாநகராட்சியின் சார்பில் மழைக்காலங்களில் கொசுக்களால் ஏற்படும் பல்வேறு நோய்களை கட்டுப்படுத்தும் வகையில் கொசுக்கள் மற்றும் கொசுப்புழுக்களை அழிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொசு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்ள 3,278 களப்பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், 224 கைத்தெளிப்பான்கள், 120 விசைத்தெளிப்பான்கள், 224 கையினால் எடுத்து செல்லக்கூடிய புகைப்பரப்பும் இயந்திரங்கள், 8 சிறிய புகைப்பரப்பும் இயந்திரங்கள், 67 புகைப்பரப்பும் வாகனங்கள் ஆகியவற்றைக் கொண்டு கொசுத் தடுப்புப்பணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆங்காங்கே மழைநீர் தேங்கும் இடங்களில் தேவையற்ற பொருட்களை அகற்றும் வகையில் மண்டலம் 1 முதல் 15 வரை அட்டவணை தயாரிக்கப்பட்டு, கொசுத் தடுப்பு பணிகள் செவ்வனே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, கொசுத்தொல்லை மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களைத் தடுக்க நீர்வழித்தடங்களின் அருகில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடும்பத்திற்கு ஒன்று வீதம் 2 லட்சத்து 60 ஆயிரம் கொசு வலைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடங்கி வைக்கும் விதமாக அமைச்சர்கள் இன்று கொசு வலைகளை பொதுமக்களுக்கு வழங்கினார்கள்.

தொடர்ந்து, அமைச்சர்கள் ராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சி பணியாளர்களால் மேற்கொள்ளப்பட உள்ள கொசு ஒழிப்புப் பணிகளை தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த டெங்கு தொடர்பான விழிப்புணர்வு கண்காட்சியினைப் பார்வையிட்டனர்.

மேயர் பிரியா

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர். பிரியா, வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் சங்கர்லால் குமாவத், நகரமைப்பு குழுத் தலைவர் இளையஅருணா, சுகாதாரக் குழுத் தலைவர் சாந்தகுமாரி, துணை ஆணையாளர்கள் எம்.எஸ். பிரசாந்த், எம்.சிவகுரு பிரபாகரன், மாநகர நல அலுவலர் எம். ஜெகதீசன், மண்டலக்குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் பா.வேளாங்கண்ணி, ராஜேஷ் ஜெயின் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

காவிரி தெற்கு காட்டுயிர்க் காப்பகம்: ஸ்டாலின் மகிழ்ச்சி

சென்னை, நவ.8–

‘‘காவிரி தெற்கு காட்டுயிர்க் காப்பகத்தை தமிழ்நாட்டின் 17–வது காட்டுயிர் காப்பகமாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்’’ என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

‘‘தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் செயல்படுத்தி வரும் பசுமை இயக்கங்களின் செயல்பாடுகளோடு இந்த முக்கிய முன்னெடுப்பு நமது மாநிலத்தின் வளமிகுந்த பல்லுயிர்ச் சூழலைக் காப்பதில் பெரும் உதவியாக இருக்கும்’’ என்றும் அப்பதிவில் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

‘‘தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்’’

மத்திய அமைச்சருக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை, நவ.8–

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 15 தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அமைச்சருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு மு.க.ஸ்டாலின் நேற்று எழுதிய கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாவது:–

தமிழ்நாட்டைச் சேர்ந்த 15 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் 5.11.2022 அன்று கைது செய்யப்பட்டது குறித்தும், அவர்களது 2 விசைப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது குறித்தும் உங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

தமிழ்நாடு அரசு பலமுறை கோரிக்கை விடுத்த போதிலும், பாக். நீரிணைபகுதியில்தமிழகமீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்யும் சம்பவங்கள் தடையின்றி தொடர்கிறது.

இது பாரம்பரிய மீன்பிடி பகுதியை வாழ்வாதாரமாக நம்பியிருக்கும் ஒட்டுமொத்த மீனவ சமூகத்தினரிடையே அச்சத்தையும், கோபத்தையும் ஏற்படுத்துகிறது.

கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய, தூதரக வழிமுறைகள் மூலமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள 100 மீன்பிடி படகுகளை விடுவிக்க நீங்கள் உதவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

LOST SALE DEED DOCUMENT

I, T.Vijayalakshmi, W/o B.Thiyagarajan, Age: 40Yrs Residing at #57,1st St,Kamarajar Nagar, Avadi, Chennai-600071.

Lost My Original Sale Deed 35 of 2009 Dt: 07-01-2009, Patta No.257, Punja Survey No 5/1A to an Extent of .51Cents Situated at No: 43, Panapakkam Village,Uthukottai Taluk, Thiruvallur District, Tamil Nadu.

Any one Who Claims any ineterested of any client over the said Property or Any Part their of may inform the same. to be undersigned within 15 Days from the Date of Publication, Failing which will be constued that the said Property is free encumbrances or charge of any nature

N.RAJENDIRAN M.A., M.Ed,B.L.,
Advocate & Notary Public
No.1, Jothiramalingam 2nd Cross st,
West Mambalam, Chennai-600033

IN THE COURT OF XIV ASST CITY CIVIL COURT
O.S.No. 6648/2018

M/s.Canara Bank (Formerly Known as M/s.Syndicate Bank)
Rep.by its Branch Manager
Saidapet Branch ...Plaintiff
Vs
S.Maniarasu ...Defendant

To
S.Maniarasu,
S/o.S.Swaminathan, No.128
Thideer Nagar, Saidapet,
Chennai–600 015

Whereas M/s. Canara Bank (Formerly known as M/s. Syndicate Bank) the plaintiff in O.S.No.6648/2018 has filed a suit against you for recovery of money on the file of Hon'ble XIV Asst Judge of City Civil COurt at Chennai The learned Judge has ordered notice to you in the said suit returnable by 28.11.2022. Kindly be present before the said court on 30.11.2022 at 10.30 a.m. failing which orders may be passed in your absence.

K.S.Viswanathan
T.Hemalatha
Counsel for Plaintiff

XV சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை
E.P.NO.246/2022

C. பாலசுப்பிரமணியன்
அவரது பவர் ஏஜெண்ட்
திரு. P. பசுபதி மூலமாக
...மனுதாரர்

எதிர்

N. தயாளன், நெ.26/47
வடமலை மேஸ்திரி தெரு,
கொண்டித்தோப்பு,
சென்னை–600001
... எதிர்மனுதாரர்

மேற்படி மனுதாரர்எதிர்மனுதாரரை வழக்கு சொத்திலிருந்து வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மேற்படி வழக்கானது எதிர்வரும் 01.12.2022 அன்று எதிர்மனுதாரரின் வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே எதிர்மனுதாரராகிய தாங்கள் அன்று காலை 10.15 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

A. அப்துல்லா அகமது
மனுதாரரின் வழக்கறிஞர்

SUNDARAM FINANCE
Enduring values. New age thinking.

30 செப்டம்பர் 2022 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(₹ கோடிகளில்)

விவரங்கள்	தனித்தது						ஒருங்கிணைக்கப்பட்டது					
	முடிவடைந்த காலாண்டு 30.09. 2022	முடிவடைந்த காலாண்டு 30.06. 2022	முடிவடைந்த காலாண்டு 30.09. 2021	முடிவடைந்த அரையாண்டு 30.09. 2022	முடிவடைந்த அரையாண்டு 30.09. 2021	முடிவடைந்த ஆண்டு 31.03. 2022	முடிவடைந்த காலாண்டு 30.09. 2022	முடிவடைந்த காலாண்டு 30.06. 2022	முடிவடைந்த காலாண்டு 30.09. 2021	முடிவடைந்த அரையாண்டு 30.09. 2022	முடிவடைந்த அரையாண்டு 30.09. 2021	முடிவடைந்த ஆண்டு 31.03. 2022
இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	1048.31	935.07	1021.82	1983.38	1971.96	3870.03	1336.82	1246.03	1293.19	2582.85	2550.32	5108.37
நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான (வரிக்கு முன், தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்)	399.12	296.76	278.46	695.88	531.59	1176.90	400.23	352.60	304.01	752.83	628.71	1416.63
நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன், (தனிப்பட்ட வகைகளுக்குப் பின் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்)	399.12	296.76	278.46	695.88	531.59	1176.90	400.23	352.60	304.01	752.83	628.71	1416.63
நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின், (தனிப்பட்ட வகைகளுக்குப் பின் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்)												
கம்பெனி உரிமையாளருக்கு காரணமானது	303.53	225.73	210.65	529.26	402.23	903.41	306.13	245.66	259.04	551.79	544.53	1173.34
மற்ற உரிமையாளருக்கானது					25.44	31.47	14.76	56.91	39.51	122.90		
நடப்புக் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [நடப்புக் காலத்திற்கான (வரிக்குப் பின்) உள்ளடக்கிய இலாபம் / (நஷ்டம்) மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்)]												
கம்பெனி உரிமையாளருக்கு காரணமானது	303.48	228.41	200.28	531.89	390.08	889.15	341.82	194.73	279.90	536.55	597.65	1207.06
மற்ற உரிமையாளருக்கானது				122.92	87.27	61.72	210.19	224.20	372.68			
செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	111.10	111.10	111.10	111.10	111.10	111.10	110.20	110.20	110.19	110.20	110.19	110.19
ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)	7204.14	7011.04	6395.57	7204.14	6395.57	6781.99	9129.54	8879.86	8186.41	9129.54	8186.41	8684.64
பங்கு பிரீமியம் கணக்கு	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil
நிகர மதிப்பு	7315.24	7122.14	6506.67	7315.24	6506.67	6893.09	9239.74	8990.06	8296.60	9239.74	8296.60	8794.83
செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை	28290.05	28616.05	26877.37	28290.05	26877.37	27887.81	37436.51	37858.49	34989.39	37436.51	34989.39	36437.87
நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள்	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil
கடன் பங்கு விகிதம்	3.87	4.02	4.13	3.87	4.13	4.05	4.05	4.21	4.22	4.05	4.22	4.14
அடிப்படை மற்றும் டைல்யூட்டட் EPS (அடிப்படை & நீர்த்தது) (முக மதிப்பு ₹10/-) (காலாண்டிற்கு ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (on PAT)	27.32	20.32	18.96	47.64	36.20	81.31	27.78	22.29	23.51	50.07	49.42	106.48
மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil
மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil	Nil
கடன் சேவை கவரேஜ் விகிதம்	NA	NA	NA	NA	NA	NA	NA	NA	NA	NA	NA	NA
வட்டி சேவை கவரேஜ் விகிதம்	NA	NA	NA	NA	NA	NA	NA	NA	NA	NA	NA	NA

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (URL : www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaramfinance.in) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. மேற்கண்ட முடிவுகள் நவம்பர் 4, 2022 அன்று நடைபெற்ற தணிக்கைக் குழு கூட்டத்தில் மதிப்பாய்வு செய்யப்பட்டு, நவம்பர் 7, 2022 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
3. நவம்பர் 12, 2021 மற்றும் பிப்ரவரி 15, 2022 தேதியிட்ட ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் NBFCகளுக்கான சொத்து வகைப்பாட்டின் விதிமுறைகளை கடுமையாக்கியுள்ளது. காலாண்டில், அக்டோபர் 1, 2022, அன்று உள்ள ஒழுங்குமுறை காலக்கெடுவுக்கு முன்னதாக, ஏப்ரல் 1, 2022 முதல் உள்ள புதிய விதிமுறைகளை நிறுவனம் ஏற்றுக் கொண்டது. பொருந்தக்கூடிய Ind AS வழிகாட்டுதல்கள் / IRACP விதிமுறைகளின்படி நிறுவனம் நிதி முடிவுகளைத் தயாரித்துள்ளது மற்றும் புதிய விதிமுறைகளை பிரதிபலிக்கும் வகையில், எச்சரிக்கையுடன் அதன் ECL மாதிரியை திருத்தியமைத்தது. இதன் மூலம் கம்பெனி ரூ. 17.37 கோடியை கூடுதல் ஒதுக்கீடு செய்துள்ளது.
4. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
5. செப்டெம்பர் 30, 2022ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் கூட்டு சட்டமுறை தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வு செய்யப்பட்டன.

சென்னை
07.11.2022

போர்டின் உத்தரவுப்படி
ராஜீவ் C லோச்சன்
நிர்வாக இயக்குநர்

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்
CIN:L65191TN1954PLC002429
பதிவு பெற்ற அலுவலகம் : 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002.
Tel: 044 2852 1181, Fax: 044 2858 6641
Email: investorservices@sundaramfinance.in www.sundaramfinance.in